# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி: 044 – 22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

**ஆணை எண் : 222 /பேரூ/2023**
**நாள்: 27.09.2023**

திரு. மு.சிங்காரம்,
கீரமங்கலம்
புதுக்கோட்டை மாவட்டம் ..... மனுதாரர்

செயல் அலுவலர்,
கீரமங்கலம் முதல்நிலை பேரூராட்சி,
புதுக்கோட்டை மாவட்டம். .... எதிர்மனுதாரர்

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கீரமங்கலம், சத்தியமூர்த்தி ரோடு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. மு.சிங்காரம் என்பவரது 04.08.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.08.2023 அன்று பெறப்பட்டு, 222/பேரூ/2023 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கீரமங்கலம், சத்தியமூர்த்தி ரோடு என்ற முகவரியைச் சேர்ந்த திரு. மு.சிங்காரம் என்பவர் தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:-

"நான் புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், கீரமங்கலம், சத்தியமூர்த்தி சாலையில் வசித்து வருகிறேன். எனது வீட்டில் எனது தாயார் மு.காந்திமதி என்பவர், வயது முதிர்வு காரணமாக கடந்த 25.04.2022 அன்று இறந்து விட்டார். அவரது இறப்பினை பதிவு செய்து சான்று வழங்கக்கோரி கடந்த 04.05.2022 அன்று கீரமங்கலம் பேரூராட்சியில் மனு அளிந்திருந்தேன். இன்று வரை இறப்புச் சான்று வழங்கவில்லை. பல நாட்கள் கீரமங்கலம் பேரூராட்சி அலுவலத்திற்கு சென்று கேட்டபொழுது எனது மனுவை காணவில்லை என்று சொல்லி என்னை அலையவிட்டு மனஉளைச்சலுக்கு ஆளாக்கி விட்டார்கள். எனவே எனது மனுவை தீர விசாரணை செய்து

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்கும்படி மிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் எனத் தெரிவித்துள்ளார்.

**2) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 14.08.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் கீரமங்கலம், பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது.**

**3) கீரமங்கலம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தனது 01.09.2023 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-**

மனுதாரர் திரு.மு.சிங்காரம் என்பவரின் தாயார் காந்திமதி 25.04.2022 அன்று வயது முதிர்வின் காரணமாக காலமானதால் திரு. மு. சிங்காரம் என்பவர் தனது தாயாரின் இறப்புச்சான்று வேண்டி கீரமங்கலம் பேரூராட்சி அலுவலகத்தில் இளநிலை உதவியாளரிடம் விண்ணப்பத்தினை ஒப்படைக்கும்போது விண்ணப்பத்தில் மருத்துவரால் வழங்கப்படும் படிவம் 4 அ (இறப்பின் காரணத்திற்குரிய உண்மை சான்றிதழ்) இல்லாத காரணத்தினால் மனுதாரரை வார்டு உறுப்பினர் மற்றும் பேரூராட்சிமன்ற தலைவர் அவர்களிடம் உரிய படிவத்தில் கையொப்பம் பெற்று விண்ணப்பத்தினை முழுமையாக பூர்த்திசெய்து அலுவலகத்தில் சமர்ப்பிக்கக்கோரி விண்ணப்பத்தினை மனுதாரரிடம் அப்பொழுதே திரும்ப வழங்கப்பட்டது. இந்நிலையில் மனுதாரர் மேற்கண்ட விண்ணப்பத்தில் தலைவர் மற்றும் வார்டு உறுப்பினரிடம் கையெழுத்து வாங்காமலும், பேரூராட்சி அலுவலகத்தில் மீள ஒப்படைக்காமலும் 14.03.2023 அன்று தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின்கீழ் தன்னுடைய தாயாரின் இறப்புச்சான்று வழங்கப்படவில்லை என புகார் அளித்திருந்தார். இதனைத் தொடர்ந்து அவரிடம் அலைபேசியில் தொடர்பு கொண்டு இறப்பு சான்று பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தினை பேரூராட்சி அலுவலகத்தில் சமர்ப்பித்து இறப்பு சான்று பெற்றுக்கொள்ளுமாறு விபரம் தெரிவிக்கப்பட்டது. மேலும் துப்புரவு மேற்பார்வையாளர்(பொ) திரு. ஆனந்தன் என்பவர் நேரில் சென்று திரு. சிங்காரம் என்பவரை பார்த்து இறப்புச்சான்றினை தாங்கள் இன்னும் பதிவு செய்திடவில்லை, அலுவலகத்திற்கு வந்து இறப்பினை பதிவு செய்தால் மட்டுமே சான்றினை பெற்றுக் கொள்ள இயலும் என்பதையும் தெரிவித்து வந்தும் அதன்பிறகும் திரு. சிங்காரம் என்பவர் அலுவலத்திற்கு வரவில்லை. இந்நிலையில் திரு.சிங்காரம் என்பவரது அண்ணன் திரு. மு. ராஜா என்பவர் 22.03.2023 அன்று இறப்பினை பதிவு செய்து, தனது தாயாரின் இறப்புச்சான்றினை 25.03.2023-ஆம் தேதியில் பெற்றுக்கொண்டார். இந்த விபரம் திரு. சிங்காரம் என்பவருக்கு அவரது சகோதரர் திரு. மு. ராஜா என்பவர் பதிவு செய்தமையால் மனுதாரரின் தாயாரின் இறப்புச் சான்று அவரது சகோதரரிடம் வழங்கப்பட்டுவிட்டது. ஆகவே அவரிடமிருந்து தாங்கள் பெற்றுக் கொள்ளவும் என்ற விபரம் தெரிவிக்கப்பட்டது. மேலும் மீண்டும் தகவல் அறியும் உரிமைச் சட்டம் மூலம் வந்த கடிதத்திற்கு மனுதாருக்கு அவருடைய தாயாரின் இறப்புச்சான்று அசல் நகலினையும் வைத்து பதில் தரப்பட்டது. எனவே இறப்புச்சான்றினை பெற்றுக் கொண்டு மனுதாரர் சொந்த காழ்ப்புணர்ச்சி காரணமாக இவ்வாறாக புகார் தெரிவித்துள்ளார் என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். எனவே மனுதாருக்கு இறப்புச்சான்று வழங்கப்பட்டுவிட்டது என்பதை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் பிறப்பு இறப்பு பதிவுகள், அலுவலகத்தில் பதிவு செய்வதற்குரிய வழிகாட்டுதல்கள் அடங்கிய தகவல் பலகைகள் பேரூராட்சி

அலுவலகத்தில் விபரம் அறியாத பொதுமக்களும் பார்த்து தெரிந்துகொள்ளும் வண்ணம் வைக்கப்பட்டுள்ளது. மேலும் அலுவலகத்தில் நேரில் வந்து பெற இயலாதவர்கள் ஆன்லைனில் இணையதளம் வாயிலாக www.crstn.org மூலம் பெற்றுக்கொள்ளவும் வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது. எனவே பேரூராட்சி அலுவலகத்தில் முறையாக பதிவுகள் செய்து உடனடியாக பிறப்பு இறப்புச் சான்றிதழ்களை பொதுமக்கள் தொய்வில்லாமல் பெற்றுக் கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**4) மனுதாரரும் கீரமங்கலம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரும் 11.09.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 05.09.2023 தேதியிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

**5) 11.09.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் மனுதாரர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்:**

புதுக்கோட்டை மாவட்டம் கீரமங்கலத்தில் உள்ள எனது வீட்டில், எனது தாயார் மு. காந்திமதி என்பவர் வயது முதிர்வின் காரணமாக 25.4.2022 அன்று காலமானார். அவரது இறப்பினை பதிவு செய்து சான்றிதழ் வழங்குமாறு கீரமங்கலம் பேரூராட்சியில் 4.5.2022 அன்று மனு அளித்திருந்தேன். மனு அளித்தபோது அதற்கான படிவம், மற்றும் தேவையான சான்றிதழ்களின் நகல்கள் ஆகியவற்றுடன் இறப்பின் உண்மைத் தன்மை குறித்து நான் குடியிருக்கும் பகுதியில் வசிக்கும் 10 நபர்களின் கையொப்பம் அடங்கிய கடிதத்தை இணைத்தும் மனு அளித்திருந்தேன். பின்னர் எனது மனு குறித்து பேரூராட்சியில் நேரடியாக சென்று கேட்டபோது எனது மனுவில் கவுன்சிலர் கையொப்பம் வேண்டும் எனக் கோரி எனக்கு எனது தாயாரின் இறப்புச் சான்றிதழை அளிக்கவில்லை. இம்முறை மன்றத்திற்கு இது குறித்து மனு அளித்தப் பின்னரே மிகவும் கால தாமதமாக எனது தாயாரின் இறப்புச் சான்றிதழின் நகலை எனக்கு அளித்தனர் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்நேர்வு தொடர்பாக நான் பேரூராட்சியில் எனது தாயாரின் இறப்புச் சான்றிதழ் கோரி மனு அளித்தபோது மேற்கண்ட மனுவுடன் இணைத்து அனுப்பப்பட்ட சான்றிதழ்களின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

**6) கீரமங்கலம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் 11.09.2023 அன்று நடைபெற்ற விசாரணையில் ஆஜ்ராகி கீழ்க்கண்டவாறு தமது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.**

மனுதாரரின் தாயார் திருமதி காந்திமதி என்பவர் வயது முதிர்வின் காரணமாக 25.4.2022 அன்று காலமானதால் மனுதாரர் தனது தாயாரின் இறப்புச் சான்றிதழ் வேண்டி விண்ணப்பத்தை ஒப்படைக்கும்போது மருத்துவரால் வழங்கப்படும் படிவம் 4அ இணைத்து அளிக்காத காரணத்தால் நடைமுறையில் உள்ளவாறு மனுதாரரை வார்டு உறுப்பினர் மற்றும் பேரூராட்சி மன்றத் தலைவரின் கையொப்பத்துடன் கூடிய படிவத்துடன் இறப்புச் சான்றிதழ் மனுவை சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது. ஆனால் மனுதாரர் அவ்வாறு விண்ணப்பம் சமர்ப்பிக்கவில்லை. மேற்கண்ட பேரூராட்சி வார்டு உறுப்பினர் மற்றும் பேரூராட்சி மன்றத் தலைவரின் கையொப்பத்துடன் கூடிய படிவத்தை மனுவுடன் இணைத்து அளிக்கவேண்டும் என இணை இயக்குநர் சுகாதார பணிகள் அலுவலகத்தில் அலைபேசியில் தெரிவித்துள்ளதால் இந்நடைமுறை இப்பேரூராட்சியில் கடைபிடிக்கப்படுகிறது என்பதை இம்முறை மன்ற நடுவத்தில்

பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் இது குறித்து எவ்வித சுற்றறிக்கையும் பேரூராட்சிகளின் இயக்குநரகத்திலிருந்து பெறப்படவில்லை என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் மனுதாரரின் சகோதரர் திரு. மு. ராஜா என்பவர் கடந்த 22.3.2023 அன்று அவரது தாயார் திருமதி காந்திமதி அவர்களின் இறப்புச் சான்றிதழை வேண்டி உரிய படிவம் மற்றும் ஆவணங்களுடன்பதிவு செய்து, 25.3.2023 அன்று மேற்கண்ட இறப்புச் சான்றிதழை பெற்றுக்கொண்டார் என்பதை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இம்முறை மன்றத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படும் எனது 1.9.2023 நாளிட்ட கடிதத்தில் கண்டுள்ள விவரங்களையும் எனது மேல் வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்.

**7) மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது வாக்குமூலம், கீரமங்கலம் முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரின் விளக்க அறிக்கை மற்றும் அவரது வாக்குமூலம் ஆகியவை தொடர்புடைய ஆவணங்களுடன் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.**

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், இம்முறைமன்றத்திற்கும் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்அடிப்படையிலும், குறிப்பாக, பிரிவு 7ல்

7. The Ombudsman shall perform all or any of the following functions, namely –

(i) xxx xxx xxx

(ii) xxx xxx xxx

(a) xxx xxx xxx

(b) xxx xxx xxx

(c) where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules. அடிப்படையிலும் இந்நிகழ்வில் பின்வருமாறு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

புதுக்கோட்டை மாவட்டம், கீரமங்கலத்தைச் சார்ந்த மனுதாரர் திரு. மு. சிங்காரம் என்பவர் தனது 04.08.2023 நாளிட்ட முறையீட்டு மனுவில் கீரமங்கலம் பேரூராட்சிக்குட்பட்ட தனது வீட்டில் தனது தாயார் மு.காந்திமதி என்பவர் 25.04.2022 அன்று வயது முதிர்வின் காரணமாக காலமானதைத் தொடர்ந்து, அவரது இறப்புச் சான்றினை கீரமங்கலம் பேரூராட்சியால் வழங்கப்படாமல் இருப்பதாக புகார் தெரிவித்துள்ளார்.

8) 1969ஆம் ஆண்டு பிறப்புகள் மற்றும் இறப்புகள் பதிவுச் சட்டம் பிரிவு 10ன் படியும் மற்றும் 2000ஆம் ஆண்டு தமிழ்நாடு பிறப்புகள் மற்றும் இறப்புகள் விதிகளில், விதி 7ன் படியும் ஒருவரின் இறப்பினை அறிக்கை செய்வதற்கும் மற்றும் இறப்பின் காரணத்தை சான்றளிப்பதற்கும் வரையறுக்கப்பட்டுள்ள படிவம் 4 Aல் மருத்துவரால் இறப்பு குறித்து சான்றளிக்கப்பட வேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் படிவம் 4A மருத்துவர் சான்று இல்லாமல் மனுதாரர் தனது தாயார் 25.04.2022 அன்று காலமானதற்கு இறப்புச்சான்றுகோரி 04.05.2022 அன்று கீரமங்கலம் பேரூராட்சியில் மனு சமர்ப்பித்ததில் மருத்துவர் சான்றுடன் அல்லது கீரமங்கலம் பேரூராட்சியின் மன்றத் தலைவர் மற்றும் மன்ற உறுப்பினரின் கையொப்பத்துடன் விண்ணப்பிக்குமாறு பேரூராட்சியால் தெரிவிக்கப்பட்டது.

9) இதற்கிடையில் மனுதாரரின் சகோதாரர் திரு. மு. ராஜா என்பவர் 22.03.2023 அன்று அவரது தாயாரின் இறப்புச்சான்று கோரி உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டதில் 25.03.2023 அன்று இறப்புச்சான்று வழங்கப்பட்டதாகவும், மனுதாரர் திரு. மு. சிங்காரம் என்பவருக்கும் தகவல் பெறும் உரிமைச் சட்டத்தின்கீழ் கோரியதன் அடிப்படையில் இறப்புச்சான்று வழங்கப்பட்டதாக பேரூராட்சி செயல் அலுவலரின் அறிக்கை மூலம் தெரிய வருகிறது. மருத்துவர் சான்று இல்லாத வயது முதிர்வின் காரணமான இறப்புகளுக்கு சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர் அலுவலக வாய்மொழி உத்தரவின்படி மருத்துவச் சான்று இல்லாத நேர்வுகளில் பேரூராட்சி மன்ற உறுப்பினர் மற்றும் மன்றத் தலைவரின் கையொப்பத்துடன் கூடிய விண்ணப்பத்தினை பரிசீலித்து இறப்புச்சான்று வழங்கப்படுகிறது எனவும் இது தொடர்பாக பேரூராட்சிகளின் இயக்குநரகத்திலிருந்து எவ்வித சுற்றறிக்கையும் பெறப்படவில்லை என செயல் அலுவலரின் வாக்குமூலம் வாயிலாக தெரிய வருகிறது.

10) இவ்வாறு இறப்புச்சான்று பெறுவதற்கு முக்கிய ஆவணமான மருத்துவர் சான்றுடன் (படிவம்–4A) விண்ணப்பிக்கப்படவேண்டும் என்று பேரூராட்சியால் பொது மக்களுக்கு தெரிவிக்காமல் பேரூராட்சி மன்ற உறுப்பினர் மற்றும் பேரூராட்சி மன்றத் தலைவரின் கையொப்பத்துடன் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென தெரிவித்திருப்பது, இவர்களாகவே ஒரு புதிய விதியினை உருவாக்கி மனுதாரருக்கு தவறான தகவல்களை அளித்து சுமார் ஒரு வருடம் அலைகழித்துள்ளனர். இதிலிருந்து பிறப்பு மற்றும் இறப்பு பதிவுச் சட்டம் 1969 மற்றும் விதிகள் 2000 குறித்து, கீரமங்கலம் பேரூராட்சி செயல் அலுவலருக்கு எள்ளளவும் தெரியவில்லை என்பது மிகவும் வருந்தத்தக்கது. மேலும் கீரமங்கலம் பேரூராட்சி செயல் அலுவலரால் மனுதாரருக்கு தவறான தகவல் அளித்துள்ள செயலை இம்முறைமன்ற நடுவம் வன்மையாகக் கண்டிக்கிறது.

11) இந்நேர்வில் மனுதாரருக்கு வழங்கப்பட வேண்டிய இறப்புச் சான்றினை மிக காலதாமதமாக வழங்கியுள்ளதன் மூலம் செயல் அலுவலர் தனது கடமையில் பொறுப்பற்ற தன்மையும், பணி அலட்சியத்தையும் காட்டுகிறது. இந்நடவடிக்கை மூலம் பேரூராட்சிக்கும் அரசுக்கும் அவப்பெயர் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. இவ்வாறு அலட்சிய போக்குடன் கடமை தவறி பணிபுரிந்துள்ள கீரமங்கலம் பேரூராட்சி செயல் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய விதிகளின்கீழ் துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரை செய்ய இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

ஏறக்குறைய ஓராண்டு காலம் இறப்புச் சான்றிதழ் வழங்க காலதாமதம் ஏற்பட்டுள்ளது என்பது ஏற்கத்தக்கதல்ல. வேண்டுமென்றே பேரூராட்சி மன்ற உறுப்பினரிடமிருந்தோ அல்லது பேரூராட்சி மன்ற தலைவரிடமிருந்தோ சான்றுக் கடிதம் பெற்றுவர வேண்டுமென்று பொறுப்பான பேரூராட்சி செயல் அலுவலர் கூறுவது ஏற்கத்தக்கதல்ல மட்டுமின்றி கண்டிக்கத்தக்கதாகும்.

12) பிறப்பு – இறப்புச் சான்றுகள் கோரி பொது மக்களிடம் வரப்படும் விண்ணப்பங்களை உடனுக்குடன் பிறப்பு – இறப்புச் சட்டம்1969ன்படி வரையறுக்கப்பட்டுள்ள உரிய ஆவணங்களுடன்

உரியகால கெடுவுக்குள் பரிசீலித்து பொது மக்களிடமிருந்து எவ்வித புகாரும் பெறப்படா வண்ணம் துரிதமாக சான்றுகள் வழங்கிடும் வகையில் உரிய சுற்றிக்கையினை அனைத்து பேரூராட்சிகள் செயல் அலுவலர்களுக்கும் அனுப்பி வைக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநரை இம்முறைமன்ற நடுவம் அறிவுறுத்துகிறது.

The Director of Town Panchayats is directed to issue suitable instructions to the Assistant Directors and Executive Officers of all Town Panchayats to follow the protocol of issuing Death certificate, based only on the existing Circulars and guidelines already in vogue without the condition of involving the elected representatives of the council to avoid problems like Casteist, Communal Group and Political over tones that may prevail in the respective areas. The Executive Officer in this case has exceeded her limit by asking the petitioner to get the endorsement of the Councillor and Chairman unnecessarily when issuing the Death Certificate to the brother of the petitioner after 1 (one) year when the Forum decided to take up the case. Disciplinary action should be taken against the Executive Officer and Staff for the bluff of replying to the petitioner that the online application was missing.

2023–ஆம் ஆண்டு, செப்டம்பர் 27–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) திரு. மு.சிங்காரம்,
சத்தியமூர்த்தி ரோடு,
கீரமங்கலம்– 614 624,
ஆலங்குடி வட்டம், புதுக்கோட்டை மாவட்டம்.

2) செயல் அலுவலர்,
கீரமங்கலம் பேரூராட்சி,
கீரமங்கலம்,புதுக்கோட்டை மாவட்டம்.

3) பேரூராட்சிகளின்இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை – 28.

4) இணை இயக்குநர் /ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
(பெயரிடப்பட்ட உரையில்)
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/ அனுப்பப்படுகிறது//

செயலாளர்

27/X/2023